BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# கலிங்கத்துப்பரணியின் கடைத்திறப்பில் பெண்களின் உளவியல்

# Kalingathu Paraniyin Kadai Thirappil Pengalin Ulaviyal

**ந. த.லிவியதரணி**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, வேளாளர்மகளிர் கல்லூரி(தன்னாட்சி), ஈரோடு – 12.

நெறியாளர்: **முனைவர் ப.ஈஸ்வரி**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு - 12.

N.T.Livyadharani

Ph.D in Tamil (Full Time), Department of Tamil, Vellalar College For Women, Erode – 12, Tamiladu, India

Email: livyadharani2210@gmail.com Phone Number : 6374520254,

Supervisor: **Dr.P.Eswari**

Associate Professor, Department of Tamil, Vellalar College For Women, Erode – 12. Tamiladu, India

## Abstract

The Kaliganthu Bharani, which is one of the best pieces of Bharani literature narrates the events of war that times and the victories of the kings. The author narrates artisticaaly the beauty of the womens inner feelings and thoughts, revealing the anger about their feelings. This research paper explores about **the psychology of women in the kalingathu Bharani kadaithirappu.**

**Key words: Kalingathu** Parani, Psychology, Artistically, Thoughts

**ஆய்வுச் சுருக்கம்**

பரணி இலக்கியங்களில் சிறந்து விளங்கும் கலிங்கத்துப் பரணியானது அக்காலத்துப் போர் நிகழ்வுகளையும், அரசனின் வெற்றிச் சிறப்புகளையும் கூறுகின்றது .இதனை இயற்றிய செயங்கொண்டார் பெண்களின் உளவியல், கடைத்திறப்பின் அழகியல், பேய்களின் செயல்கள் போன்றவற்றை கலை நயத்துடன் விவரித்துள்ளார்உளவியல் . என்பது மனிதனின் உள்ளத்து உணர்வுகளை ஆராய்வதாகும். அவற்றில் போர்முனை நாடிச் சென்ற தன் தலைவனை நினைத்து தலைவியானவள் தனித்து இருக்கும் நிலையையும், அவற்றில் பெண்களின் உள்மனம் வெளிப்படுத்தும் உண்மைத் திறத்தையும் உளவியலானது வெளிக்காட்டுகின்றது. அவற்றில் **கலிங்கத்துப் பரணியின் கடைத்திறப்பில் பெண்களின் உளவியல்** என்னும் பகுதியை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறிச்சொற்கள்**: கலிங்கத்துப்பரணி, உளவியல், கலைநயத்துடன், கூற்றுக்கள்

## உளவியல் கோட்பாடு

உளவியல் கோட்பாடானது மனிதவியல்பையும், நடத்தை முறைகளையும், உள்ளத்தின் செயல்பாடுகளையும் அறிவியல் முறையில் பல கோணத்திலிருந்து ஆராயப்படும் கற்றல் பயன்பாட்டு ஒழுங்குமுறையாகும். உளவியலாளர் ஒரு மனிதனின் தனிப்பட்ட உளச் செயல்பாட்டு பாங்கினையும், சமூக ஒழுக்கத்தினையும் ஆய்வு செய்யும் போது அவற்றில் உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு, ஆளுமை, நடத்தை ஆகியவற்றையும் ஆராய்கின்றனர். அவற்றில் உளவியல் கோட்பாடென்பது,

1. அமைப்பு நிலைக் கோட்பாடு
2. செயல் நிலைக் கோட்பாடு
3. நடத்தைக் கொள்கை
4. நோக்கக் கொள்கை
5. உளப்பகுப்பாய்வுக் கொள்கை

என்ற வகைமைகளைக் கொண்டு அமைகின்றது.

மேலும், உளவியல் என்பது பொது உளவியல், குழந்தை உளவியல், நெறிபிறழ் உளவியல், உடற்கூற்று உளவியல், ஒப்புமுறை உளவியல்,நடைமுறை உளவியல் என்ற பிரிவுகளையும் கொண்டுள்ளது.

கலிங்கத்துப்பரணி என்பது அக்காலத்துப் பேரரசனாக திகழ்ந்த முதலாம் குலோத்துங்கச் சோழன் தன் படைத்தலைவனானகருணாகரத் தொண்டைமான் என்பவரைக் கொண்டு கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்துச்சென்ற செய்தியைக் கூறுகின்றது. கிபி 11ஆம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்கச்சோழன் காலத்தில் வாழ்ந்த செயங்கொண்டார் இப்பரணியை பாடியவர். இவரே பரணிக்கோர் செயங்கொண்டார் என்றும் புகழப்படுகின்றார். இவர் இந்நூலில் குலோத்துங்கன் அவையில் வீற்றிருக்கும் சிறப்பு, அவன் நால்வகைச் சேனையுடன் போருக்கு புறப்பட்டு பயணம் செய்யும் இயல்பு, படைகள் போருக்கு எழுந்த தன்மை, படைகளின் போர்க்கள காட்சி, பேய்களின் செயல்கள், மகளிரின் செயல்கள் போன்றவற்றை ஒருங்குபட அமைத்துள்ளார்.

உளவியல் என்பது மனிதனின் செயல்பாடுகளை அறிவியல் முறையில் ஆராயும் திறன் ஆகும்.இவற்றில் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கத்துப் போரின் வெற்றியைப் போற்றும் வண்ணம் செயங்கொண்டார் என்னும் புலவரால் பாடப்பெற்ற கலிங்கத்துப் பரணியின் கடைத் திறப்பில் போர்முனையை நாடிச் சென்று வீடு திரும்பும் போது ஊர் ஆரவாரம் மிகுந்து காணப்படுகின்றது. அப்போது போர் வீரர்களின் மனைவியர் மட்டும் வெற்றியில் பங்கு பெறாமல் ஊடல் கொண்டு உள்ளனர். அவர்களின் செயல்பாடுகளையும், அவர்களின் மனவுணர்வுகளையும் தன் கற்பனை நயத்தோடு கவிஞர் கூறும் உளவியல் முறையானது விவரிக்கப்பட்டுள்ளது.

**செயல்நிலைக் கொள்கை**

மனிதன் பலவகையான செயல்பாட்டிற்கு உள்ளாகும் போது அவனது செயல்களால் விளையும் பயன்களைப் பற்றியும், இச்செயல்கள் சூல்நிலைக்கு ஏற்றவாறு மாற்றம் பெறும் போது மனிதனும் எவ்வாறு மாற்றம் பெறுகிறான் என்பதைப் பற்றி ஆராய்வதாகும்.இதில் இளமையுடைய காதலர் மேல் ஊடல் கொண்டுள்ள பெண்கள், தம் காதலரைக் காண வராமல் பொய்யாகக் கண்களை மூடிக் கொண்டு உறங்குகின்றவர்களைப் போன்று நடிப்பர் என்பதை,

*“கூடியஇின்கனவு அதனிலே*
*கொடைநர துங்கனோடு அணைவுறாது”*[1]

என்னும் பாடலடிகளானது, கணவன் மீது ஊடல் கொண்ட சூல்நிலையைக் கூறுகின்றது.மேலும்,

*“கழனி மாஅத்து விளைந்துகும் தீம்பழம்*
*பழன வாளை கதூஉம் ஊரன்”*[2]

என்றஉறையூர் முதுகொற்றனார் பாடலானது, பரத்தையிடம் சென்றத் தலைவனைக் கண்டு தலைவியானவள் ஊடல் கொண்டு உள்ளாள்.போர் முனை நாடிச் சென்ற தலைவன் மீதும், பரத்தையை நாடிச் சென்ற தலைவன் மீதும் பிரிவுத் துயரினால் மனதில் நிகழும் செயல்நிலை மாற்றத்தைக் கூறுகின்றது.

**நோக்கக் கொள்கை**

மனிதனின் உணர்வுகளானது பல்வேறு தூணுடுதல்களால் நிகழ்த்தப்படுவதாகும். ஆதலால் அவனது நடத்தையும் மாற்றம் பெறுகின்றன. இதற்குக் காரணம் அவனை உள்ளிருந்து ஊக்குவிக்கும் செயல்களே ஆகும். ஆகவே உள்ளிருந்து ஊக்குவிக்கும் செயலை அரிதல் வேண்டும் என்று வலியுறுத்துவதே நோக்கக் கொள்கையாகும்.இவற்றில் தங்கள் கணவன் மீது பிணக்கம் கொண்ட பெண்கள் தங்கள் ஊடல் தீர்ந்த பின்னர் முல்லை அரும்பு போன்ற பற்களில் புன்சிரிப்பும், இன்பமிகுதியால் முத்து போன்ற கண்ணீர் துளிகளையும் சிந்துவர் என்பதை,

*“முனிபவர் ஒத்திலராய் முறுவல் கிளைத்தலுமே*
*முகிழ்நகை பெற்றம் எனா மகிழ்நர் மணித்துவர் வாய்”*[3]

என்ற இப்பாடலடிகளானது விளக்குகின்றது.பிணக்கம் கொண்டதால் ஏற்பட்ட துன்பமானது தன் கணவனுடன் சேர்ந்த பின்னரும் கனவென்றே நினைக்கும் பெண்களின் அகநோக்கு உளவியலை வெளிப்படுத்துகின்றது. மேலும்,

*“காமக் கிழத்தி மாண் நலம் கவர*
*நீயும் கொண்க! நீ நயந்தோர்க்க”*[4]

என்ற கடலூர்ப் பல்கண்ணனார் பாடலானது, பரத்தையிடம் சென்றதால் ஊடல் கொண்ட தலைவியை, பாகன் என்ற வாயில் கொண்டு தலைவன் ஊடல் தீர்த்து மீண்டும் தலைவன் தன் தலைவியுடன் ஒன்றுபட்டு வாழுகின்றனர்.பிணக்கம் கொண்டதால் ஏற்பட்ட துன்பமானது தன் கணவனுடன் சேர்ந்த பின்னர் இன்பமடையும் அகநோக்கு உளவியலை வெளிப்படுத்துகின்றது.

**அமைப்பு நிலைக் கொள்கை**

உள்ளம் என்பது நனவு உள்ளத்தையே குறிப்பதாகும். புலனுணர்வுகள், பிம்பங்கள், மனவுணர்ச்சிகள் போன்ற பல்வேறு அமைப்புகளைக் கொண்ட உள்ளத்தின் இயல்புகளையும், அளவுகளையும் அறிவதே அமைப்புநிலை உளவியலின் நோக்கமாகும்.

இதில் முதற்குலோத்துங்கச் சோழன் வேண்டியவற்களுக்கு வேண்டும் பொருளைக் கொடுக்கும் இயல்பினன் அவனைக் கண்டும் அவனோடு ஊடல் கொண்டு, மகிழாமல் இருந்து விட்டோமே என்று பெண்கள் தன் நெஞ்சோடு பிணக்கம் கொள்வர் என்பதை,

*"ஊடிய நெஞ்சினோடு ஊடுவீர்*
*உமது நெடுங்கடை திறமினோ"*[5]

என்ற பாடலடிகளானது விளக்குகின்றது. மேலும்,

*"அம்ம வாழி, தோழி!*
*சிறியிலைக் குறுஞ் சினை வேம்பின்"*[6]

என்ற ஓதலாந்தையாரின் பாடலானது, தலைவியானவள் வௌவால்கள் வேப்பம் பழத்தை உண்பதைப் பார்க்கும் போது தலைவனை நினைத்து துயரம் அடைகின்றாள். அதே போன்று தலைவனும் பொருன்வயின் தேடிச் சென்ற இடத்திலும் இந்நிகழ்வு நடைபெற்றால் தலைவனும் இதே போன்று வருத்தம் அடைவான் என்று தலைவியானவள் துயருறும் தன்மையையும், பெண்களின் புலனுணர்வுகளையும், மனவுணர்ச்சிகளையும் விவரிக்கின்றது.

**நடத்தைக் கொள்கை**

மனிதனின் வெளிப்படையான அல்லது புறத்தே இருந்து ஆராயக்கூடிய நடத்தையை மட்டுமே ஆராய வேண்டும் என்று வலியுறுத்துவதே நடத்தைக் கொள்கையாகும்.இதில் போர் முனையை நாடிச் சென்ற தன் தலைவன் மீண்டு வருவதாக் கூறிச் சென்ற காலமானது முடிந்தும் தலைவன் மீண்டு வராமையால் தலைவியானவள் காத்திருந்து சோர்ந்து விழுகிறாள் என்பதை,

*"ஆளும் கொழுநர் வரவு பார்த்து*
*அவர்தம் வரவு காணாமல்"*[7]

என்ற பாடலடிகளானதுவிவரிக்கின்றது. மேலும்,

*"வாள்வாடித் தன்ன வன்வேல் அஞ்சி*
*நின்கெழு நளிமலைப் பணைப்பாடி"*[8]

என்ற ஔவையாரின் பாடலானது போர்க்களம் நாடிச் சென்ற தலைவனின் உயிர்க்கு ஏதேனும் துன்பம் வந்து விடுமோ, அவன் உயிர் கவரப்படுமோ என்று தலைவியானவள் துன்பமடையும் நிலையானது தலைவியின் புலனுணர்வுகளையும், மனவுணர்ச்சிகளையும் விவரிக்கின்றது.

**உளப் பகுப்புக் கொள்கை**

உளப்பகுப்பாய்வுக் கொள்கை என்பது நனவு நிலையிலிருந்து கீழுள்ள நனவிலி மனத்தில் உள்ள பல்வேறு எண்ணங்களும், சிக்கல்களும், எழுச்சிகளுமே உளவியலுக்கு காரணமாகும் என்கின்றது. இக்காள்கையை தோற்றுவித்தவர் சிக்மன்ட் பிராய்டு என்னும் உளவியல் அறிஞர் ஆவார். நனவிலி மனத்தில் நம்மால் உணர முடியாத எண்ணங்கள், நோக்கங்கள், விருப்பு வெறுப்புகள், அனுபவங்கள் போன்றவை மறைந்துள்ளன. இதில் சோழர்களில் சிறந்தவனான முதலாம் குலாத்துங்கச் சோழனின் அருள் முழுவதும் தமக்கே உரியது என்று பெண்கள் இரவில் கனவில் களிப்படைவர் என்பதை,

*"முத்துவடம் சேர் முகிழ் முலைமேல்*
*முயங்கும் கொழுநர் மணிச்செவ்வாய்"*[9]

என்ற பாடலடிகளானது பெண்களின் விருப்பத்தை விளக்குவதாக அமைகின்றது.மேலும்,

*"கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்*
*கானங் காரெனக் கூறினும்"*[10]

என்ற ஓதலாந்தையார் பாடலானது, கொன்றை மலர் பூக்கும் கார்காலம் வந்துவிட்டதை அறிந்து தலைவனானவன் மீண்டு வருவான் என்று தலைவியானவள் தன்னகத்தே இன்புறும் நிலையை எடுத்துரைக்கின்றது.

**முழுநிலைக் காட்சிக் கொள்கை**

உள்ளச் செயல்கள் ஒவ்வொன்றும் முழுமையாக அமைந்த பண்புகளாகும். ஆகவே இவற்றின் உண்மை நிலையை அறிய முழுமையாக நோக்கி ஆராய வேண்டும். புலனுணர்வுகளைக் கொண்டு ஆராய்தல் என்பது இதற்கு பயனற்ற ஒன்றாகும்என்னும் இக்கொள்கையை இரவலர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் தன்மையுடைய முதலாம் குலோத்துங்கன் அணியும் ஆத்தி மாலையின் மீது கொண்ட பெண்கள் அவன் எப்போது மீண்டு வருவான் என்று காத்துக் கொண்டிருந்தனர் என்பதை,

*"வைத்த பவள வடம் புனைவீர்*
*மணிப்பொன் கபாடம் திறமினோ"*[11]

என்ற பாடலடிகளானது உள்ளத்தின் உண்மை நிலையை விவரிக்கின்றது.

**உளவியலின் பிரிவுகள்**

**பொது உளவியல்**

பொது உளவியல் என்பது மனிதர்களின் சாதாரண நடத்தையை விவரிப்பது ஆகும். இதில் மனவுணர்ச்சிகள், புலக் காட்சிகள் போன்றவை அடங்குகின்றன. இதில் மன்மதனின் மலர்கள் போன்ற பெண்களின் கடைக்கண்களானது, பாற்கடல் நஞ்சு மற்றும் அமிர்தம் போன்று தம் கணவர்களின் உயிரையும், உணர்வையும் ஊடுருவிச் செல்வதாக அமைகின்றது என்பதை,

*"கடலில் விடம்என அமுதுஎன மதனவேள்*
*கருதி வழிபாடு படையொடு கருதுவோர்"*[12]

என்ற பாடல் வரிகளானது, கண்ணெனும் புலனால் பிறரை ஈர்க்கும் உணர்வினைக் காட்டுகின்றது.மேலும்,

*“வேல்போனிறை பொருதுண்பது மெய்யேயுயிர் பொய்யே*
*சேல்போற்கடை பிறழுங்சில கண்ணீர்கடை திறமின்”*[13]

என்ற பாடலடிகளானது கயல் மீன்களைப் போன்றபெண்களின் கண்களானது தன் தலைவனின் உயிரையும் உண்டுவிடக் கூடியது என்பதைக் கொண்டு கண் என்னும் புலனுணர்வு கொண்டு பிறரை ஈர்க்கும் இயல்பினைக் கூறுகின்றது.

**நெறிப் பிறழ் உளவியல்**

நெறிப் பிறழ் உளவியலானது சமநிலையினின்றும் பிறழ்ந்த மனிதர்களின் அசாதாரண நடவடிக்கைகளை விவரிப்பதாகும். குலோத்துங்கன் போருக்குச் சென்ற பின்னர் அவனுடன் கூடி மகிலும் இன்பம் அடையாத பெண்கள் தன் கனவில் வாழ்வதாக நினைப்பர் என்பதை,

*“நனவினில் சயதரன் புணரவே பெறினும், நீர்*
*நனவு எனத் தெளிவுறாது, அதனையும் பழைய அக்”*[14]

என்ற பாடலடிகளானது, பெண்களின் நடத்தையானது கனவிலும் நினைவிலும் பிறழும் தன்மையை விளக்குகின்றது.

**ஒப்புமுறை உளவியல்**

மனிதனின் நடத்தைகளுக்கிடையே உள்ள நிலையை ஒப்பிட்டு ஆராய்வது ஒப்புமுறை அழகியலாகும். இம்முறையானது பெரும்பாலும் குழுக்களிடையே உள்ள மனப்பான்மையையும், சமூகவியலுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இவற்றில் மெல்லிய இயல்புடைய பெண்களின் கண்களானது காதலனைக் கவரும் வண்ணம் ஊடுருவிச் செல்வதைப் போன்று பாண்டியர்களின் மீது சோழர்களின் வேற்படையானது செல்கின்றது என்பதை,

*“அஞ்சியே கழல் கெடக் கூடலிற் பொருது சென்று*
*அணி கடைக் குழையிலே விழ அடர்த்து எறிதலால்”*[15]

என்ற பாடல் வரிகள், பெண்களின் புலனுணர்வும், சோழர், பாண்டியர் இருவரிடையே உள்ள ஆளுமை மற்றும் சமூக நிலையானது அமைந்துள்ளதைக் கூறுகின்றது.

**தொகுப்புரை**

கலிங்கத்துப்பரணியின் கடைத்திறப்பில் பெண்களின் உளவியல் என்னும் இப்பகுதியில் உளவியல் கோட்பாட்டில் இடம்பெறும் வகைகளையும், பிரிவுகளையும் விளக்குகின்றது. இவற்றில் கலிங்க நாட்டின் மீது போர்தொடுத்துச் சென்ற முதலாம் குலோத்துங்கனின் வெற்றிச் சிறப்பகளையும் , வீரர்களின் நிலை ,இயற்கையின் வனப்பு ,பெண்களின் மனவுணர்வு, அதை அவர்கள் வெளிப்படுத்தும் முறைகள் போன்றவையும், சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும், பெண்களுக்கும் உள்ள ஒப்புமையையும் ,இவை அமையும் முறைமைகளையும் விவரிப்பதாக இக்கட்டுரையானது அமைகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் -24
2. குறுந்தொகைப் பாடல் எண் - 08
3. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் -27
4. நற்றிணைப் பாடல் எண் - 100
5. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் -24
6. ஐங்குறுநூறு, பாடல் எண் - 339
7. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் -38
8. புறநானூறு, பாடல் எண் - 87
9. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் -30
10. குறுந்தொகைப் பாடல் எண் - 21
11. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் –30
12. மேலது, பாடல் எண் -48
13. தக்கயாக்கப் பரணி, பாடல் எண் - 21
14. கலிங்கத்துப் பரணி, பாடல் எண் -35
15. மேலது, பாடல் எண் -32

**துணை நூற்பட்டியல்**

1. கமலாமுருகன். முனைவர் கே.இரா., தக்கயாகப் பரணி சாரதா பதிப்பகம், சென்னை- 600 014, 2016
2. புலியூர் கேசிகன் (உரை), ஐங்குறுநூறு, சாரதா பதிப்பகம், சென்னை - 600 014, 2009
3. புலியூர் கேசிகன் (உரை), கலிங்கத்துப் பரணி, சாரதா பதிப்பகம், சென்னை- 600 014, 2009
4. புலியூர் கேசிகன் (உரை), குறுந்தொகை, சாரதா பதிப்பகம், சென்னை- 600 014, 1996
5. புலியூர் கேசிகன் (உரை), நற்றிணை, சாரதா பதிப்பகம், சென்னை- 600 014, 2001
6. புலியூர் கேசிகன்(உரை), புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை- 600 014, 2006
7. லீலா ஞானலெட், ச., பொது உளவியல், சாரதா பதிப்பகம், சென்னை- 600 014, 2012